பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி22 புதன்கிழமை 07.09.2022 கதிர் 193

## ஊட்டச்சத்துக் குறைபாடு: யுனிசெவ் அறிக்கையை நிராகரித்தது இலங்கை

ஐந்து வயதுக்குட்பட்ட எடை குறைந்த சிறுவர்கள் கடுமையான ஊட்டச் சத்துக் குறைபாட்டை எதிர் கொள்ளும் நாடுகளில் இலங்கை 6 ஆவது இடத்தி ☞2

# சர்வதேசக் குற்றவியல் மன்றத்திடம் இலங்கையைப் பாரப்படுத்துங்கள்!

### ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் உறுப்பு நாடுகளிடம் தமிழ்க் கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரன் கோரிக்கை



இலங்கை தொடர்பான உண்மை நிலைவரங்களை ஓரளவேனும் வெளிப்படுத்தி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் காட்டமான அறிக்கையை வெளியிட்டு இருக்கின்ற நிலையில், அதனை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை விடயத்தை ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் மூலம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் அதனைப் பாரப்படுத்தும் விதத்திலான தீர்மானம் ஒன்றை எடுங்கள்.

- இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்பு நாடுகளை கோரியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன். ☞8



## இலங்கைக்கு அமெரிக்கா பேராதரவு

இலங்கையின் கடனை மறுசீரமைப்பதற்கான ஆதரவை அமெரிக்கா உறுதிசெய்துள்ளது என்று ☞2

## வடக்கில் சீனாவின் ஆக்கிரமிப்பு உச்சம்!

### சபையில் சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு



வடக்கில் சீனாவால் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படு கின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிள்ளைகள் மற்றும் தாய்மாரின் மந்தபோனை தொடர்பில் யுனிசெப் நிறுவனம் வெளியிட்டிருக்கும் அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக, போர் முடிந்தும் 12 ஆண்டுகளுக்கும் மேலாக வடக்கு, கிழக்கிலே வாழ்கின்ற குழந்தைகள் போக்கின்மையோடுதான் பிறந்திருக்கின்றார்கள், வாழ்ந்திருக்கின்றார்கள்.

இலங்கை அரசுகள் விதித்த மோசமான பொருளாதார தடைகளால்தான் தமிழர்கள் போக்கற்றவர்களாக வாழ்ந்தார்கள். உரங்கள், எரிபொருள்கள், ☞2



## மியன்மாரினால் அரிசி அன்பளிப்பு

இலங்கைக்கு மியன்மார் 17 கோடி ரூபா பெறுமதியான 1000 மெட்ரித் ☞2

## அரசியல் கைதிகள் மீண்டும் விடுதலைக்கான போராட்டம்

### அருட்தந்தை சத்திவேல் அறிக்கை



அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான எதிர்பார்ப்பு இன்று வரை நிலைநாட்டப்படவில்லை. இந்நிலையில் மீண்டும் தமது விடுதலைக்கான போராட்டத்தை ஆரம்பிக்கும் வாய்ப்பே உள்ளது - என்று அரசி யல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார். ☞2

## இரு ராஜபக்ஷக்களும் பதவி விலகியமை தவறு

### 'மொட்டு'க் கட்சி கூறுகின்றது




ராஜபக்ஷக்களின் அரசியல் வகிபாகம் நாட்டுக்குத் தேவை என்ற நிலைப்பாட்டிலேயே பெரும்பாலான இலங்கையர்கள் இன்றும் உள்ளனர். எனவே, ராஜபக்ஷக்கள் பதவி விலகி இருக்கக்கூடாது என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாக உள்ளது - என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ☞2

## மக்கள் தங்க இடமின்றி வீதிகளில் அந்தரிப்பு; இராணுவத்துக்கோ காணிகள் தாரைவார்ப்பு

### சீறிப் பாய்கின்றது கூட்டமைப்பு



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரம் பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 4 ஆயிரம் பேருக்கும் குடியிருக்கக் காணிகள் இல்லை. ஆனால், கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட பளையில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 1,840 ஏக்கர் காணிகளை இராணுவத்துக்கு வழங்க நடவடிக்கை ☞2

## கோட்டாவுக்கு அரசியலில் ஈடுபடும் எண்ணமில்லை!

### சாகர எம்.பி. தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு மீண் டும் அரசியலில் ஈடுபடும் எண்ணம் இல்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், ☞2

## கர்ப்பிணிப் பெண் உள்ளிட்ட 18 பேர் குளவிகொட்டி பாதிப்பு



மஸ்கெலியா நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்சபான தோட்ட எமில்டன் பிரிவில் கர்ப்பிணிப் பெண்ணொருவர் உட்பட 18 தோட்டத் தொழிலாளர்கள் குளவிக்கொட்டுக்கு ☞8

## இந்தியாவை வீழ்த்தி வென்றது இலங்கை!

### இறுதிப் போட்டிக்கும் நுழைவு




ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 'சுப்பர் 4' ☞8

## 10 மாவட்டங்களில் சீரற்ற காலநிலை!

### ஆயிரக்கணக்கானோர் பாதிப்பு



இலங்கையில் நுவரெலியா உட்பட 10 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## அரசியல் கைதிகள்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரால்இன்றுவெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப்புலிகளின் மீளுருவாக்கம் என்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடை மற்றும் மகசின் சிறைச்சாலைகளில்தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் தாம் கைதுசெய்யப்பட்ட நாட்களில் இருந்து இன்று வரை நீதிமன்றத்துக்கு அழைக்காதிருக்கின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நியாயம் கோரியும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்த விடயத்தில் அரசும், நீதி அமைச்சும் கவனம் செலுத்தி இவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு நியாயத்தை நிலைநாட்டுமாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு அவசர வேண்டுகோளை விடுகின்றது.

வடக்கு, கிழக்கு தமிழர்களை அடக்குமுறைக்குள் வைத்திருப்பதற்காகவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தொடர்ந்து அமுல்படுத்துவதற்கான நியாயத்தைக் கற்பிக்கவும் சர்வதேசத்தை ஏமாற்றும் புலி உருவாக்கம் என அண்மைய காலங்களில் தமிழ் இளைஞர்கள் தொகையாகக் கைதுசெய்யப்பட்டனர்.

சர்வதேசத்தை நம்ப வைப்பதற்காகவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்ட அரசியல் கைதிகளை விடுவிக்கின்றோம் என்று வெளி உலகத்துக்குக் காட்டவும் கடந்த இரண்டு, மூன்று வருடங்களில் புலி உருவாக்கும் எனக் கைது செய்யப்பட்டவர்களில் ஒருசிலரை ஆட்சியாளர்கள் பிணையில் விடுவித்தனர்.

மீதமுள்ளவர்களுக்கு எதிரான வழக்கை நீதிமன்றம் எடுக்காது காலத்தை இழுத்தடிப்புச் செய்வது நியாயத்தை மறுக்கும் திட்டமிட்ட செயலாகும். இதனை அனுமதிக்க முடியாது.

இந்நிலையில் இவர்கள் தமக்கு நியாயம் வேண்டியும், ஒட்டுமொத்த அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருப்பது குடும்பத்தாரை கவலையில் ஆழ்த்தியுள்ளது. அவர்களை உணவு தவிப்புப் போராட்டத்தில் இருந்து மீட்குமாறும், உடல் நிலையைக் கவனத்தல் கொண்டு விடுதலையை வலியுறுத்துமாறும் கேட்கின்றனர்.

அரசியல் கைதிகளாக பல ஆண்டுகளாக சிறையில் வாடுவோர் தமது விடுதலைக்காகப் பல தடவைகள் போராட்டம் நடத்தி உள்ளதோடு சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தையும் நடத்தியுள்ளனர்.

அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை நம்பி அத்தகைய போராட்டங்கள் கைவிடப்பட்டாலும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான எதிர்பார்ப்பு இன்று வரை நிலைநாட்டப்படவில்லை. இந்நிலையில், அவர்களும் மீண்டும் தமது விடுதலைக்கான போராட்டத்தை ஆரம்பிக்கும் வாய்ப்பே உள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவிருக்கும் காலகட்டத்தில் மிக அண்மையில் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சிலரை பிணையில் அனுப்பிவிட்டு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக அரசு நாடகமாடும் வாய்ப்பு உள்ளது.

இந்நிலையில் தமிழ் அரசியல் தலைமைத்துவங்கள் இதனைக் கருத்தில்கொண்டு உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோரின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றஅரசுக்குஅழுத்தம்கொடுப்பதோடு ஒட்டுமொத்த அரசியல் கைதிகளும் விடுதலையாகுவதற்கு கூட்டுச் செயற்பாட்டை முதன்மைப்படுத்துமாறு அரசியல் கைதிகளின் பெற்றோரோடு அரசியல் கைதிகளின் தேசிய அமைப்பும் கேட்டுகொள்கின்றது - என்றுள்ளது.

## வடக்கில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போஷாக்கு உணவுகள் அனுப்பப்படவில்லை.

இதனால்எத்தனையோகுழந்தைகள் போாக்கின்மையால், பட்டினியால் இறந்தார்கள்.

இந்தக் காலத்தைப்பற்றி சற்று சிந்தியுங்கள். திட்டமிட்டு தமிழர்கள் மீது இலங்கை அரசுகள் பொருளாதார தடைகளை விதித்தபோது எவ்வளவு தூரம் தமிழர்கள் போக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை இப்போது சிங்கள சகோதரர்கள் பார்க்கக்கூடியதாக இருக்கும்.

வடக்கில் கடலட்டை பண்ணைகள் என்ற பெயரில் சீனாவால் பெருமளவு நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. சீனாவின் இந்தச் செயற்பாடுகள் வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகமாக மக்களைப் பாதிக்கின்றன.

அழிக்கப்பட்டுள்ள, படுகொலை செய்யப்பட்டுள்ள தமிழ் மக்கள் தொடர்பில் ஜெனிவாவில் பிரேரணை வருகின்றபோது இலங்கைக்கு ஆதரவாகப் பேசிக்கொண்டிருக்கும் சீனா இன்னொரு புறத்தில் யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற தமிழ் இளைஞர்களின் கல்விக்குத் தான் 5 ஆயிரம் ரூபா பணம் கொடுப்பதை பெரிய விடயமாகக் காட்டுகின்றது. மீனவர்களுக்கு 4 ஆயிரம் ரூபா கொடுப்பதை பெரிய செய்தியாக்குகின்றது. ஆனால், நாம் செத்துக்கொண்டிருக்கின்றோம்.

நாம் போக்கின்மையாலும் சாகின்றோம். வாழ்வாதாரமின்றியும் சாகின்றோம். எங்களின் நிலைமை மாசமாகிக்கொண்டிருக்கின்றது.

இலங்கையின்அமைதியின்மையில் சீனாவின் மறைக்கரங்கள் இன்னும் இன்னும் அகோரமாக இருக்கின்றது. இது மிகவும் மோசமானது - என்றார்.

## மக்கள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டுள்ளது. - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் குடியிருக்கக் காணிகள் இல்லாமல் 18 ஆயிரம் பேர் அந்தரிக்கின்றார்கள். அவர்களில் தெருக்களில் இருக்கின்றார்கள், உறவினர், நண்பர்களின் காணிகளில் இருக்கின்றார்கள்.

என்னுடைய காரியாலயத்துக்குத் தினசரி குறைந்தது 10 பேர் காணி கேட்டு வருகின்றார்கள். இது தொடர்பாக நான் வடக்கு ஆளுநருக்கு நான்கு தடவைகள் கடிதம் எழுதினேன்.

பளையில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 1,840 ஏக்கர் காணியில் ஒவ்வொருவருக்கும் அரை ஏக்கர் காணியை அரசு வழங்க வேண்டும். அவர்கள் தொழில் செய்து அந்த இடத்தில் இருப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

நல்ல தண்ணீர் உள்ள இடம். தோட்டம் செய்யக்கூடிய நிலம். எனவே, காணி இல்லாதவர்களுக்கு வழங்குங்கள்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்குக் கடிதம் எழுதினேன். பச்சிலைப்பள்ளி பிரதேச செயலருக்குக் கடிதம் எழுதினேன். ஆனால், இதுவரை எதுவும் நடக்கவில்லை. யாருக்கும் ஒரு துண்டு காணி கூட வழங்கப்படவில்லை.

இந்நிலையில், பளையில் உள்ள 1840 ஏக்கர் காணிகளைக் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச்சொந்தமான காணி என்ற அடிப்படையில் இராணுவத்துக்குக் கொடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு அமைச்சரவை அனுமதிக்குச் சமர்ப்பிப்பதற்கான முழு முஸ்தீபுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இராணுவம் தோட்டம் செய்வதற்குக் காணிகளைக் கொடுக்கின்றார்கள். பலாலியில் தனியாரின் 3 ஆயிரத்து 500 ஏக்கர் காணிகளில் இராணுவம் தோட்டம் செய்கின்றது. வட்டக்கச்சியில் அரச காணியில் இராணுவம் தோட்டம் செய்கின்றது - என்றார்.

## இரு ராஜபக்ஷ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போது அவர் மேலும் கூறியதாவது:-

ராஜபக்ஷக்கள் தாம் வகித்த பதவிகளில் இருந்து விலகியது தவறு என்பதே நான் உட்பட எமது கட்சியில் உள்ளபெரும்பாலானஉறுப்பினர்களின் கருத்தாக உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவுக்கு 69 இலட்சம் பேர் வாக்களித்தனர். எனவே, அவரைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் அம்மக்களுக்கே காணப்படுகின்றது. மாறாக வீதியில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தவர்களுக்கு அந்த அதிகாரம் கிடையாது.

அவரை நீக்கும் அதிகாரம் அந்த மக்களுக்கே உள்ளது. மாறாக வீதிக்கு இறங்கும் ஒரு இலட்சம் பேரால் அதைச் செய்ய முடியாது.

மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைத்தது. எனவே, அவர் பதவி விலகியதும் தவறு.

இந்நாட்டில் மக்கள் ஆசியுடன்தான் ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வந்துள்ளனர். பலவந்தமாக வந்ததில்லை.

எமது கட்சி மக்களுடன்தான் உள்ளது. நாம் மக்கள் மத்தியில் செல்வோம். ராஜபக்ஷக்களின் தேசிய அரசியல் அவசியம் என்ற நிலைப்பாட்டிலேயே பெரும்பாலான மக்கள் உள்ளனர் - என்றார்.

## கோட்டாவுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுடன் நாம் நேரில் கலந்துரையாடியுள்ளோம். தனது எதிர்கால அரசியல் தொடர்பில் எந்த வொரு நிலைப்பாட்டையும் அவர் வெளிப்படுத்தவில்லை.

அவருக்கு மீண்டும் அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் இருப்பதாகவும் தெரியவில்லை.

எனினும், பொதுஜன பெரமுனவுடன் ராஜபக்ஷக்களின் அரசியல் தொடரும் - என்றார்.

## 10 மாவட்டங்களில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் பலியாகியுள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

இதுவரை 3 வீடுகள் முழுமையாகவும், 630 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன. 69 குடும்பங்கள் வரை இடம்பெயர்ந்துள்ளன.

## ஊட்டச்சத்து......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும், தெற்காசியாவில் 2 ஆவது இடத்திலும் உள்ளது எனக் குறிப்பிடும் யுனிசெப்பின் அண்மைய அறிக்கையை இலங்கையின் சுகாதார அமைச்சு நிராகரித்துள்ளது.

சுகாதார அமைச்சில் கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனகஸ்ரீசந்திரகுப்த, இந்தஅறிக்கையை தொகுக்க யுனிசெப் பயன்படுத்திய தரவுகள் திருப்திகரமாக இல்லை என்று தெரிவித்தார்.

ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் கணக்கிடுவதற்கு, வயதுக்கேற்ற உயரம், உயரத்துக்கான எடை மற்றும் வயதுக்கேற்ற நிறை ஆகிய மூன்று காரணிகளைக் கருத்தில்கொள்ள வேண்டும் என்றும், ஆனால் யுனிசெப் தனியாக உயரத்துக்கேற்ற நிறையை மட்டும் பயன்படுத்துவதன் அடிப்படையில் தவறான அறிக்கையைத் தயாரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

மற்ற நாடுகளைப் போலல்லாமல், இலங்கையில் சிறுவர்கள் உடல் மெலிவதால் மரணம், மரஸ்மஸ் அல்லது குவாஷியர்கோர் போன்ற கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு போன்ற அபாயம் இல்லை.

நீண்ட கால ஊட்டச்சத்து குறைபாட்டைக் கருத்தில் கொள்ளும்போது, ஆபிரிக்க நாடுகளை விட இலங்கை சிறந்த நிலையில் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடிப்படை ஆண்டு இல்லாத யுனிசெப் அறிக்கை தவறானது. ஆபிரிக்க நாடுகளைப் போல நம் நாட்டில் குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு இல்லை.

சிறுவர்களின் வயதுக்கேற்ற உயரத்தின் அடிப்படையில் முதல் 150 நாடுகளில் நமது நாடு 70 ஆவது இடத்தில் உள்ளது.

ஆனால், எதிர்கால உணவுப் பாதுகாப்புக்காகக் கடந்த ஜூலை மாதம் வழங்கப்பட்ட அவசர ஊட்டச்சத்துத் திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம்.

அதன்படி, கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் சிறு குழந்தைகளின் போக்குத் தேவைகள் தொடர்பில் நாம் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு முழுப்பொறுப்புடையது - என்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த மேலும் தெரிவித்தார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த யுனிசெப்பின் தெற்காசிய பிராந்தியத்தின் பணிப்பாளர் ஜோர்ஜ் லரி அட்ஜே தெற்காசியாவில் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள தெற்கா சிய நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது என்று தெரிவித்திருந்தார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியுடன் ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மக்களின் உணவுப்பழக்கம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியிருந்த அவர், நாளுக்கு நாள் உணவுப் பொருட்களின் விலை யேற்றமே இதற்குக்காரணம் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதன்படி, இலங்கையில் பல குடும்பங்கள் தினசரி உணவைத் தவிர்ப்பதுடன், சத்தான உணவைப் பெறாமல் இருப்பதும், உணவுப் பொருட்களை வாங்க முடியாமையும் முக்கியக் காரணம் என்றும் யுனிசெப் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் சிறுவர்களின் போசாக்கு குறைபாடு தொடர்பில் யுனிசெப் விடுத்துள்ள அறிக்கை நிராகரிக்கப்பட்டால், அது தொடர்பான உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களை சுகாதார அமைச்சு சமர்ப்பிக்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பல்வேறு தரப்பினர் வெவ்வேறு புள்ளிவிபரங்களை முன்வைத்தாலும் இந்நாட்டுமக்கள்உணவுவிநியோகத்தில் பிரச்சினைக்கு முகங்கொடுத்து வருவதைத் தெளிவாக அவதானிக்க முடிகின் றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சமில் விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

'பாரிஸ் கிளப்' கொள்கைகளுக்கு இணங்க நிதி உதவி உத்தரவாதங்களை அமெரிக்கா நீடிக்கும் என்று அமெரிக்க திறைசேரி செயலர் ஜேனட் யெல்லன் தெரிவித்துள்ளார்.

இந்த நோக்கத்துக்காக உலக வங்கி, ஆசிய அபிவிருத்த வங்கி மற்றும் அமெரிக்க முகவர்களுடன் அமெரிக்கா செயற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மியன்மாரில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொன் வெள்ளை அரிசியை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. அந்த நாட்டுக்கு நியமிக்கப்பட்ட புதிய இலங்கைத் தூதுவர் ஜனக பண்டாரவின் வேண்டுகோளின் பிரகாரம் இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

இந்த அரிசித் தொகை கடந்த 4 ஆம் திகதி அங்கிருந்து கப்பலேற்றப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் அவை இலங்கை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொருளாதாரக் குற்றங்கள்

**இலங்கையைப் பொறுத்த வரை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஜெனிவாத் திருவிழாக் களை கட்டி விட்டது**

**இலங்கை விவகாரத்தை ஒட்டி ஜெனிவாவில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட 46/01 இலக்கத் தீர்மானத்தின் காலம் முடிவடைந்த நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அவதானிப்பு அறிக்கை நேற்று வெளியாகிவிட்டது.**

**எதிர்பார்க்கப்பட்டத்திலும் விட இலங்கைக்குக் காரமானதாகவும், சூடானதாகவும் சில விடயங்களை அப்பட்டமாகவும் பட்டவர்த்தனமாகவும் வெளிப்படுத்தும் விதத்திலும் அது அமைந்திருக்கின்றமை முக்கிய திருப்பம்.**

**அதனால் தமிழர் தரப்பில் பிரதான அரசியல் கட்சியான தமிழ்க் கூட்டமைப்பு இதனை முழுமையாக வரவேற்றிருக்கின்றது.**

**கூட்டமைப்பு சுட்டிக்காட்டுவது போல ஆணையாளரின் அறிக்கை காட்டமாகவும் பல விடயங்களை வெளிப்படையாகவும் வெளிப்படுத்தி இருப்பதால் அதை ஒட்டி, அதன் அடிப்படையில், இம்முறை அமர்வில் இலங்கை தொடர்பில் – மிக வலிமையான – இலங்கையை நீதியின்பாற் செயற்பட நெட்டித் தள்ளுகின்ற – ஒரு தீர்மானத்தை அங்கத்துவ நாடுகள் எடுக்கக் கூடிய ஒரு வாய்ப்பும் கிட்டியிருக்கின்றது.**

**இலங்கையின் யுத்தக் குற்றங்கள், அதன் அடிப்படையிலான பொறுப்புக் கூறல் குறித்தே கடந்த 13 ஆண்டுகளாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் பிரேரிக்கப்பட்டும் பேசட்டும் வந்தது.**

**ஆனால் இம்முறை இன்னொரு முக்கிய விடயம் தொடர்பிலும் பொறுப்பு கூறல் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளிப்படையாகப் பேசியிருக்கிறார்.**

**அது பொருளாதார குற்றங்களுக்கான பொறுப்பு கூறலாகும். இலங்கைத் தீவு இன்று இவ்வளவு மோசமான பொருளாதாரநிதிநெருக்கடிக்குகளுக்குள் மாட்டி, மீள முடியாமல் பரிதவித்து நிற்கின்றது என்றால் அதற்கு முக்கிய காரணம் அதிகாரத்தில் – ஆட்சியில் – இருந்தவர்கள் நாட்டின் பொருளாதாரத்தின் கனபரிமாணங்கள் குறித்து எண்ணிப் பார்க்காமல், தான்தோன்றித்தனமாக நடந்து, பொருளாதாரச் சூறையாடலில் ஈடுபட்டமையே ஆகும்.**

**யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, அம்பலப்படுத்தி, நீதியையும் பொறுப்புக் கூறலையும் நிலை நாட்டுவது போன்று, நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்து, நாட்டையே நாசமாக்கிய தரப்புக்களும் பொறுப்புக் கூறல் பொறிமுறையின் கீழ் நிறுத்தப்பட வேண்டும் என்பதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளிப்படையான கோரிக்கையாக முன் வைத்திருக்கின்றார்.**

**சுற்றி வளைத்து ஆராய்ந்தாலும், வெளிப்படையாக பேசினாலும், இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு காரணமான பிரதான சூத்திரதாரிகள் ராஜபக்ஷக்கள்தான்.**

**ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இதுவரை பேசிய குற்றச்சாட்டுகள் தமிழர்களுக்கு எதிராகப் புரியப்பட்ட யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் பற்றியவை என்பதால் அவற்றை மூர்க்கமாக எதிர்த்து நின்றன தென்னிலங்கைத் தரப்புகள்.**

**இப்போது தென்னிலங்கையே ஒற்றைக் குரலில் கூறும் – கோரும் – பொருளாதாரக் குற்றங்கள் குறித்தும் விசாரிக்கவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தி இருக்கின்றார். இப்போது என்ன கூறப் போகின்றன பௌத்த சிங்கள பேரினவாத தரப்புகள்?**

# உள்ளூர் உற்பத்தியை பெருக்குவதன் மூலமாகத் தேசத்தை மாற்ற முடியும்!

உள்ளூர் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமாகவே எங்கள் தேசத்தை மாற்றிக் கொள்ள முடியும் என வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் செ.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா விவசாய சம்மேளன அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

எங்களது நாடு மிக மோசமான நிலைக்குச் சென்றுவிட்டது. இதனை மீட்பதற்காக ஜனாதிபதியால் ஐம்பது திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் விவசாயிகளுக்கு முக்கியமானதாக காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல், வனவள திணைக்களத்தில் இருந்து காணிகளை விடுவித்தலாகும்.

குறிப்பாக இந்த இரண்டு விடயங்கள் தொடர்பாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனின் பிரசன்னத்துடன் சம்பந்தப்பட்ட கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம்.

உள்ளூர் உற்பத்தியை பெருக்குவதன் மூலமாகவே எங்கள் தேசத்தை மாற்றிக் கொள்ள முடியும். வனவள திணைக்களத்தினரால் உழுது, கிணறு வெட்டி, தோட்டம் செய்த காணிகளுக்குக் கூட கல்லைப் போடுகின்ற மோசமான செயலைச் செய்கின்றனர்.

வனவளத் திணைக்களத்தினர் ஒரு ஐந்து ஏக்கரையாவது வவுனியா மாவட்டத்தில் சிறப்பாக பராமரித்தோம் என்பதைக் காட்ட முடியுமா? மேலைத்தேய நாடுகளிலே பற்றைக்காடுகளைக் காண முடியாது. வனவளத் திணைக்களம் பயன்படுத்துவார்கள் அல்லது விவசாயிகள் பயன்படுத்துவார்கள். ஆனால் இங்கே விவசாயம் செய்ய இடமில்லை.

கடந்த முப்பது வருடங்களுக்கு முன் உழுந்து உற்பத்தியில் இலங்கையிலே வவுனியா மாவட்டம் 40 வீதமான உற்பத்தியை மேற்கொண்ட மாவட்டமாகும். இன்று காணிகள் முழுவதும் வன திணைக்களத்திடம் உள்ளது. இவ்வாறு இருப்பின் எவ்வாறு உற்பத்தியைப் பெருக்கவோ, உற்பத்தியை செய்யவோ முடியும்.

ஜனாதிபதியிடம் நாங்கள் கேட்பது துங்களின் ஐம்பது திட்டங்களிலே எமக்குரிய காணிகளுக்கான அனுமதிப் பத்திரத்தைத் தருவதன் மூலமாக நாங்கள் வன திணைக்களனத்தினரிடம் இருந்து தப்பிக்கொள்ள முடியும்.

இந்த நாட்டில் வன திணைக்களம் ஒரு சாபக்கேடான ஒரு திணைக்களம். ஜனாதிபதியிடம் கேட்பது நீங்களாக கூறிய 50 விடயத்தில் அனுமதி பத்திரங்களைத் தாருங்கள் அதன் மூலம் வன திணைக்களத்திடமிருந்து தப்பிக்கொள்ள முடியும். வனவளத்திணைக்களத்தின்; நடவடிக்கையை ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தாலே இடங்களை மீட்க முடியும்.

உளுந்து உற்பத்தியாக இருந்தாலும், மரக்கறி செய்கையாக இருந்தாலும் வவுனியா மாவட்டத்தில் உற்பத்தி செய்து நாட்டுக்கே கொடுக்க கூடியளவு சந்தர்ப்பம் இருக்கின்றது.

மேட்டுநிலம், வயல், கால்நடை மூன்றும் ஒன்றுக்கொன்று போட்டியாக செய்து கொண்டிருக்கின்றோம். வன வளம் விட்டால் இவர்கள் நடும் மரத்துக்கு பதிலாக தென்னை மரங்களை நட்டு வன வளதிணைக்களத்தை விட பெரிய வேலைகளை செய்து காட்டுவோம்.

வன்னி பிரதேசத்தை பொறுத்தவரையில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மூன்று மாவட்டங்களிலும் குறைந்தது 40 வருடங்களாக பயன்பாட்டிலுள்ள உளுந்து, மேட்டுநில பயிற்செய்கை, தென்னை மரங்கள் உள்ள மக்களுடைய காணிகளுக்கு ஜப்பான் உறுதி உள்ளது. இப்போது பிரதேச செயலாளர் அது பயன்பாட்டில் இல்லை என்று கூறுகிறார்.

இலங்கையில் இருக்கின்ற 25 மாவட்டங்களையும் ஒரேபோல் திட்டம் போடாதீர்கள். கிராமங்களை பொறுத்தமட்டில் 10 , 15 இற்கு மேற்பட்ட ஏக்கர் கணக்கில் விவசாயம் செய்கின்றார்கள். அதனை குறைக்க நினைக்காதீர்கள். குறைந்தது 5 ஏக்கராவது வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன் என மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆதரவுடன் மீண்டும் தலைதூக்கும் ராஜபக்ஷக்களின் ஆட்சி!

## பிரபல சட்டத்தரணி எச்சரிக்கை



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட அனைத்து ராஜபக்ஷ குடும்பத்தினரும், அவர்களது ஆதரவாளர்களும் மீண்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியின் கீழ் தலை தூக்குகின்றார்கள் என காலி முகத்திடல் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்த சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் இன்று ஏற்பட்டிருக்கும் அத்தியாவசிய உணவு, மருந்து, டொலர் பற்றாக்குறைக்கான பழியை போராட்டத்தை முன்னெடுத்த மக்கள் மீது ரணில் அரசாங்கம் சுமத்துகின்றது எனவும் நாணயக்கார விசனம் தெரிவித்துள்ளார்.

மேலும், அரசாங்கத்தை எதிர்த்து மக்களால் முன்னெடுக்கப்பட்ட காலி முகத்திடல் போராட்டம் முடிவடைந்து விட்டது என அனைவரும் நினைக்கிறார்கள். எனினும் அது நிறைவடையவில்லை.

இலங்கை வாழ் மக்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளின் முடிவாக மீண்டும் ஒரு போராட்டம் முன்னெடுக்கப்படும். இலங்கையில் மீண்டும் எழும் மக்கள் போராட்டத்தை எவராலும் அடக்க முடியாது என்பதை அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பதும் மருந்து பற்றாக்குறை ஏற்படுவதும் மக்கள் போராட்டங்களால் அல்ல. மக்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தற்போதைய அரசாங்கத்திடம் எந்தவொரு தீர்வும் இல்லை.

இலங்கையில் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக என்பதை அரசாங்கம் மறக்கக் கூடாது. பிரச்சினைகளுக்கு தீர்வு காணாது போராட்டத்தில் பங்கு பற்றிய இளைஞர்களைக் கைதுசெய்வது சட்ட விரோதமான செயலாகும்.

மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்ற இவ்வாறான சூழ் நிலையிலும் ராஜபக்ஷ குடும்பத்தினர் சொகுசு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றார்கள்.

அரசாங்கம் போராட்டங்களை முன்னெடுத்தவர்களுக்கு அரசியலையும் நீதியையும் கற்றுக்கொடுக்க முயற்சிக்காது நாடாளுமன்றத்தில் இருக்கும் 225 பேருக்கு முதலில் கற்றுக்கொடுக்க வேண்டும். இலங்கையையும் அதன் அரசியலையும் சரி செய்யும் திட்டங்கள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# மகாராணி நியமிக்கும் 15 ஆவது பிரி. பிரதமர்

லண்டன்,செப்.07

இங்கிலாந்து மகாராணி இரண்டாம் எலிசபெத் கண்ட இங்கிலாந்தின் 15 ஆவது பிரதமர் என்ற சிறப்பை லிஸ் டிரஸ் பெற்றுள்ளார்.

இங்கிலாந்து நாட்டில் ஆறாம் ஜோர்ஜ் மன்னர் 1952 ஆம் ஆண்டு மரணம் அடைந்தபோது, அந்த நாட்டின் ராணியானவர், அவரது மகள் எலிசபெத். இரண்டாம் எலிசபெத் என அழைக்கப்படுகிற அவருக்கு அப்போது வயது 25. அப்போது இங்கிலாந்து பிரதமராக இருந்தவர் வின்ஸ்டன் சர்ச்சில், அதன் பின்னர் சர் ஆண்டனி ஈடன் தொடங்கி போரிஸ் ஜோன்சன் வரை 13 பிரதமர்களை அவர் நியமித்து அவர்களோடு பணியாற்றி உள்ளார்.

தற்போது இங்கிலாந்து பிரதமராக லிஸ் டிரஸை ராணி இரண்டாம் எலிசபெத் நியமித்துள்ளார். அந்த வகையில் ராணி இரண்டாம் எலிசபெத் கண்ட இங்கிலாந்தின் 15 ஆவது பிரதமர் என்ற சிறப்பை லிஸ் டிரஸ் பெறுகிறார். ராணி இரண்டாம் எலிசபெத் பதவிக்காலத்தில் இங்கிலாந்து 3 பெண் பிரதமர்களைக் கண்டிருக்கிறது. அவர்கள், மார்கரெட் தாட்சர், தெரசா மே, லிஸ் டிரஸ் ஆவார்கள். 11 பிரதமர்கள் கொன்சர்வேடிவ் கட்சியினர். 4 பேர் மட்டுமே தொழிற்கட்சியை சேர்ந்தவர்கள்.

# பிரி. உள்துறை அமைச்சராக இந்திய வம்சாவளி பெண்மணி



லண்டன்.செப்.07

இங்கிலாந்தின் புதிய உள்துறை மந்திரியாக தமிழ்நாட்டைப் பூர்வீகமாக கொண்ட இந்திய வம்சாவளி பெண் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து நாட்டின் புதிய பிரதமராக லிஸ் டிரஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனை தொடர்ந்து போரிஸ் ஜோன்சன் ஆட்சியின் போது உள்துறை மந்திரியாக பணியாற்றிவந்த இந்தியாவை பூர்வீகமாக கொண்ட பிரித்தி படேல் தனது பதவியை ராஜினாமா நேற்று செய்தார். இந்நிலையில், இங்கிலாந்து நாட்டின் புதிய உள்துறை மந்திரியாக சூலா பிரேவர்மென் (வயது 42) நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர், தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்ட இந்திய வம்சாவளி பெண் ஆவார்.

சூலா பிரேவர்மெனின் தாய் உமா. இவர் தமிழ்நாட்டை சேர்ந்தவர். இவர் 1960ஆம் ஆண்டுவாக்கில் இங்கிலாந்தில் குடியேறினார். உமா இங்கிலாந்தில் குடியேறிய கென்யாவை சேர்ந்த கிரிஸ்டி பெர்னாண்டஸ் என்ற நபரை திருமணம் செய்துகொண்டார்.

இந்த தம்பதிக்கு பிறந்தவர் தான் சூலா. சூலா 2018 ஆம் ஆண்டு ரெயல் பிரேவர்மென் என்ற நபரை காதலித்து திருமணம் செய்துகொண்டார். இந்த தம்ப திக்கு 2 குழந்தைகள் உள்ளன. பர்ஹம் தொகுதி எம்.பி.யான சூலா பிரேவர்மென் இங்கி லாந்து அரசு வழக்கறிஞராக செயல்பட்டு வந்தார். லிஸ் டிரஸ் இங்கிலாந்தின் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் சூலா பிரேவர்மென் நாட்டின் உள்துறை மந்திரியாக நியமிக் கப்பட்டுள்ளார். அவருக்கு பல்வேறு தரப்பினர் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# அமெ., உக்ரைன் அதிபர்களுடன் பிரிட்டனின் புதிய பிரதமர் பேச்சு

லண்டன்,செப்.07

இங்கிலாந்தின் புதிய பிரதமரான லிஸ் டிரஸ், அமெரிக்கா மற்றும் உக்ரைன் அதிபர்களுடன் தொலைபேசி மூலம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.



இங்கிலாந்தின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள லிஸ் டிரஸ், அமெரிக்கா மற்றும் உக்ரைன் அதிபர்களுடன் தொலைபேசி மூலம் பேச்சு நடத்தியுள்ளார்.

இது தொடர்பாக இங்கிலாந்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள தகவலில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இங்கிலாந்து பிரதமர் லிஸ் டிரஸ் உடன் தொலைபேசி மூலம் பேசினார். அப்போது இங்கிலாந்தின் புதிய பிரதமராக பொறுப்பேற்றமைக்கு அவர் வாழ்த்துத் தெரிவித் தார்.

வடக்கு அயர்லாந்தில் அமைதியைப் பாது காப்பதன் முக்கியத்துவத்தை இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். மேலும் ரஷ்யா அதிபர் புடின் நடத்தி வரும் போரினால் ஏற்பட்டுள்ள தீவிர பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர் எனக் கூறப் பட்டுள்ளது.

இதேபோல் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியுடன் நடைபெற்ற தொலைபேசி உரையாடலில், ரஷ்யாவிற்கு எதிரான போரில் உக்ரைனுக்கு, இங்கிலாந்து முழு ஆதரவளிக்கும் என்று டிரஸ் உறுதியளித்தார்.

# ஓரினச்சேர்க்கையை ஊக்குவித்த 2 யுவதிகளுக்கு மரண தண்டனை

## ஈரானில் அதிர்ச்சித் தீர்ப்பு


ரியத் சட்டத்தை மீறி உள்ளனர் எனத் தெரிவித்து இரு ஈரான் பெண்களுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பு அளிக்கப்பட்டது.

ஈரான் நாட்டில் ஜாஹ்ரா செதிகி ஹமேதானி (வயது 31), எல்ஹாம் சுப்தார் (24) ஆகிய 2 பெண்கள் ஓரினச்சேர்க்கையை ஊக்குவிக்கும் வகையில் செயல் பட்டு வந்ததனர் எனக் குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக அவர்கள் இருவர் மீதும் வடமேற்கு நகரமான உர்மியாவில் உள்ள நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. விசாரணையில் அவர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதால், அவர்கள் 2 பேருக்கும் நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்து தீர்ப்பு அளிக்கப்பட்டது.

இந்த தகவலை ஹெங்காவ் குர்திஷ் உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

பூமியில் ஊழலை பரப்பியதற்காக அவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் ரியத் சட்டத்தை மீறி உள்ளனர், உர்மியா சிறையில் அடைக்கப்பட்டுள்ள அவர்களுக்கு தண்டனை விவரம் தெரிவிக் கப்பட்டு விட்டது என்று அந்த அமைப்பு கூறுகிறது. இரு பெண்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பதை ஈரான் நீதித்துறை உறுதிப்படுத்தி உள்ளது. இந்த தீர்ப்பு அந்த நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நியூயோர்க் நீதிமன்ற நீதிபதியாக அருண் சுப்பிரமணியன் நியமனம்



வொஷிங்டன்,செப்.07

அமெரிக்காவின் நியூயோர்க் நீதிமன்ற நீதிபதியாக இந்திய வம்சாவளியைச்சேர்ந்தவரைத் தேர்வு செய்து ஜனாதிபதி ஜோபைடன் அறிவிப்ப. வெளியிட்டார்.

அமெரிக்காவின் நியூயோர்க் தெற்கு மாவட்ட நீதிபதியாக அமெரிக்க வாழ் இந்தியரான அருண் சுப்பிரமணியனை ஜனாதிபதி ஜோபைடன் பரிந்துரைத்துள்ளார். இது தொடர்பான நீதித்துறை நியமனங்கள் வெள்ளை மாளிகையால் செனட் சபைக்கு அனுப்பப்பட்டது.

இந்த நியமனம் செனட் சபையால் உறுதி செய்யப்பட்டால் நியூயார்க் தெற்கு மாவட்ட கோர்ட்டில் பணியாற்றும் முதல் தெற்காசிய நீதிபதி அருண் சுப்பிரமணியன் என்ற சிறப்பை பெறுவார். 2006 முதல் 2007 ஆம் ஆண்டு வரை அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதி ரூத்பேடர் கின்ஸ்பர்கின் சட்ட எழுத்தராக பணியாற்றினார். அமெரிக்க மாவட்ட நீதிபதியாக பரிந்துரை செய்யப்பட்டுள்ள அருண் சுப்பிரமணியனுக்கு தேசிய ஆசிய பசிபிக் அமெரிக்க பார் அசோ சியேன் வாழ்த்து தெரிவித்துள்ளது.

# விஷ எறும்புகள் திடீர் படையெடுப்பால் கிராம மக்கள் வீடுகளை விட்டு ஓட்டம்!




ஒடிசாவில் வி எறும்புகள் சாரை சாரையாக படையெடுத்து வருவதால், கிராம மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர். ஒடிசாவில், பழங்குடியின கிராமங்களில் வி எறும்புகள் என அழைக்கப்படும் சிவப்பு எறும்புகள் அதிகம் உள்ளன. மழைக் காலங்களில் இவை அதிகமாக ஊர்ந்து வரும். இந்நிலையில் பிரமானஷி மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த கன மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இப்போது வெள்ளம் வடியத் துவங்கியுள்ளதை அடுத்து, வி எறும்புகள் அதிக அளவில் கிராமங்களுக்குள் படையெடுத்து வருகின்றன. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வி எறும்புகள் வருவதால், பல கிராமங்களில் மக்கள் எறும்பு மருந்தை வீட்டைச் சுற்றி போட்டுள்ளனர். அதையும் தாண்டி எறும்புகள் வீட்டுக்குள் நுழைந்து விடுகின்றன.

இந்த எறும்பு கடித்தால், உடலில் பெரிய கொப்புளம் ஏற்படுவதுடன், கடுமையான எரிச்சலும் ஏற்படும். சிலருக்கு இதனால் காய்ச்சலும் அடிக்கிறது. இதற்கு பயந்து சில கிராமங்களில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி, வேறு பகுதிகளில் உள்ள உறவினர் வீடுகளில் தஞ்சம் அடைந்து வருகின்றனர். வீடு, சாலை, வயல் வெளி உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் வி எறும்புகள் சாரை சாரையாக வருகின்றன.

இது குறித்து கிராம மக்கள் கூறியதாவது:-

இந்த எறும்புகள், வழக்கமாக மழைக்காலங்களில் வரும். இதை சிவப்பு எறும்பு அல்லது தீ எறும்பு என அழைப்போம். ஆனால், அவை கட்டுப்படுத்தக் கூடிய அளவுக்குத் தான் இருக்கும். இப்போது இதுவரை இல்லாத வகையில் ஏராளமான எறும்புகள் வந்துள்ளன. நிம்மதியாக தூங்க முடியவில்லை. குழந்தைகளால் படிக்க முடியவில்லை. எறும்பு மருந்தாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. - இவ்வாறு அவர்கள் கூறினர்.

இதையடுத்து, பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு மருத்துவ குழுக்கள், தீயணைப்பு படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். பூச்சி மருந்து தெளித்து எறும்புகளை கொல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சுவாமி நித்தியானந்தாவுக்கு மெல்லக் கொல்லும் விஷம்?

## கசிந்தது அதிர்ச்சித் தகவல்




சென்னை,செப்.07

சர்ச்சைக்குரிய பிரபல சாமியார் நித்தியானந்தாவை, விஷம் கொடுத்து இரகசியமாகக் கொல்ல முயற்சி நடந்துள்ளதாக, அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

பெங்களூருவில் ஆசிரமம் அமைத்து, ஆன்மிக பணிகளில் ஈடுபட்டு வந்த நித்தியானந்தா, நடிகை ஒருவருடன் நெருக்கமாக இருப்பது போன்ற வீடியோ வெளியானதால் சர்ச்சையில் சிக்கினார். பாரம்பரிய மதுரை ஆதீனத்தின் இளைய மடாதிபதியாக, அவர் நியமிக்கப்பட்டதும், பெரும் சர்ச்சையானது.

நித்தியானந்தா மீது புகார்கள் குவிய, நாட்டில் இருந்தே வெளியேறினார். அவர் எங்கிருக்கிறார் என்பது தெரியாத நிலையில், கைலாசா என்ற தனி நாட்டை உருவாக்கி, அங்கு தாம் வசிக்கிறார் எனத் தொடர்ச்சியாக வீடியோக்களை வெளியிட்டு வந்தார். ஆனால், கடந்த ஓராண்டாக அவரது செயல்பாடுகள் குறைந்தன.

பல மாதங்களாக, அவரது நேரடி வீடி யோக்கள் எதுவும் வரவில்லை. உடல்நல குறைவால்வர் பாதிக்கப்பட்டு இருக்கி றார் எனச் செய்திகள் வந்தன.

இந்நிலையில், சிகிச்சைக்காக இலங்கை அரசிடம் அனுமதி கோரியிருக்கிறார் எனவும் கூறப்படுகிறது.

ஆரோக்கியமாக இருந்த நித்தி யானந்தாவுக்கு, திடீர் உடல் நல குறை ஏற்பட்டதற்கு, மெல்லக் கொல்லும் விஷம் கொடுக்கப்பட்டதே காரணம் என்ற, தகவல் வெளியாகி உள்ளது. இது அவரது பக்தர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

நித்தியானந்தாவின் ஆசிரமத்திற்கு இந்தியாவிலும், பல நாடுகளிலும் ஏராளமான சொத்துக்கள் உள்ளன. அவற்றின் மதிப்பு பல ஆயிரம் கோடி ரூபாய் என்று சொல்லப்படுகிறது. இவற்றை கைப்பற்ற, அவருடன் இருப்பவர்களே இரகசியமாக விஷம் கொடுத்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

# பாடசாலை மாணவ, மாணவிகள் விஷவாயு தாக்கியதில் மயக்கம்

## ஆந்திராவில் நேற்றுச் சம்பவம்



திருப்பதி,செப்.07

ஆந்திராவில் வி வாயு தாக்கியதில் பள்ளியில் பாடம் கவனித்து கொண்டிருந்த மாணவ, மாணவிகள் மயக்கம் அடைந்தனர்.

ஆந்திரா மாநிலம், காக்கிநாடா, சர்பாபுரம் மண்டலம் வலசப்பாக்கம் பகுதியில் மத்திய அரசின் கேந்திரிய வித்யாலயா பள்ளி இயங்கி வருகிறது. இந்தப் பள்ளியில் 300 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இந்த பள்ளியின் அருகே இரசாயனத் தொழிற்சாலை மற்றும் ஒயில் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

நேற்று வழக்கம்போல் பள்ளிக்கு வந்த மாணவ, மாணவிகள் வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்துவதைக் கவனித்துக் கொண்டு இருந்தனர். அப்போது இரசாயனத் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் புகையின் மூலம் விவாயு அப்பகுதியில் பரவியது. இதனால் 7ஆம் வகுப்பு மாணவி ஒருவர் தனக்கு கண் எரிச்சல் ஏற்பட்டு மூச்சுத் திணறுவதாகக் கூறும் போதே மயக்கம் அடைந்து கீழே விழுந்தார்.

இதே போல் அருகருகே உள்ள 6,7,8 ஆம் வகுப்பில் இருந்த 18 மாணவர்கள் மயக்கம் அடைந்தனர். இதனை கண்டு அதிர்ச்சி அடைந்த ஆசிரியர்கள் உடனடியாக வகுப்பறையில் இருந்த மற்ற மாணவ, மாணவிகளை வெளியேற்றி பள்ளி மைதானத்தில் அமர வைத்தனர்.

இதுகுறித்து பொலிஸார் மற்றும் அம்புலன்ஸிற்கு தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் மயக்கமடைந்த மாணவ, மாணவிகளை மீட்டு அங்குள்ள அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பள்ளியில் மாணவ, மாணவிகள் மயக்கம் அடைந்த தகவல் அவர்களது பெற்றோர்களுக்குத் தெரிய வந்தது. தங்களது பிள்ளைகளுக்கு என்ன ஆனதோ என்ற பயத்தில் அலறி அடித்துக் கொண்டு பள்ளியை நோக்கிவர்கள் படையெடுத்தனர். ஒரே நேரத்தில் மாணவர்களின் பெற்றோர்கள் பள்ளி முன்பாக குவிந்ததால் பரபரப்பு நிலவியது. இதையடுத்து பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர். விவாயு தாக்கியது குறித்து பொலிஸார், கல்வித்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பட்டாசு வெடிக்க டெல்லியில் தடை!



புதுடெல்லி,செப்.07

டெல்லியில் அடுத்தாண்டு ஜனவரி முதலாம் திகதி வரை பட்டாசு பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் பல்வேறு நகரங்களிலும் கடந்த சில ஆண்டுகளாக காற்று மாசு அதிகரித்த வண்ணம் இருக்கிறது. அதிகபட்சமாக தலைநகர் டெல்லி காற்று மாசுவால் திணறி வருகிறது. அங்கு கடந்த சில ஆண்டுகளாகவே காற்றின் தரம் மிக மிக மோசமான நிலையில் இருந்து வருகிறது.

இதனால் டெல்லியில் கடந்த நான்கு ஆண்டுகளாக தீபாவளி பண்டிகைசமயத்தில் பட்டாசுகள் வெடிக்க தடை அமுலில் இருந்து வருகிறது. இந்த சூழலில் நாடு முழுவதும் அக்டோபர் 24 ஆம் திகதி தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட இருக்கிறது. இந்நிலையில் தலைநகர் டெல்லியில் பட்டாசுகளை விற்க, வெடிக்க, சேமித்து வைக்க 2023 ஆம் ஆண்டு ஜனவரி மு லாம் திகதி வரை தடை விதித் அம்மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கோபால்ராய் உத்தரவிட்டுள்ளார். இதுதொட பாக அவர் தனது டுவிட்டரில் டெல்லியில் இந்த முறை ஒன் லைன் பட்டாசு விற்பனைக்கும் நேரடி விற்பனைக்கும் தடை விதிக்கப்படுகிறது. இந்த கட்டு பாடு ஜனவரி 1, 2023 வரை அமலில் இருக்கும். தடையை கடுமையாக அமுல்படுத்த டெல்லி பொலிஸ், டெல்லி மாசு கட்டுப்பாட்டுக் குழு மற்றும் வரு வாய் துறையுடன் இணைந்து செயல் திட்டம் வகுக்கப்படும் டெல்லியில் கடந்த ஆண்டை போல் மாசு அபாயத்தில் இருந்து மக்களை காப்பாற்றும் வகை யில், இந்தமுறையும் அனைத்து வகையான பட்டாசுகளின் உற்பத்தி, சேமிப்பு, விற்பனை மற்றும் பயன்பாடு முற்றிலு தடை செய்யப்பட்டுகிறது என்று அதில் அமைச்சர் கோபால்ராய் பதிவிட்டுள்ளார்.

# கிழக்குப் பல்கலையில் சீனத் தூதர் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில்






சீன மக்கள் குடியரசின் தூதுவர் புலமைப் பரிசில் வழங்கும் விழா நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கணகசிங்கம் தலைமையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பாதுகாப்பு அறிவியல் பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக சீன மக்கள் குடியரசின் தூதுவர் குய் ஜென்ஹாங் மற்றும் திருமதி.குய் ஜென்ஹாங் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

சீன மக்கள் குடியரசின் ஊடாக கிழக்கு மாகாணத்தில் மக்கள் நலன் சார்ந்த பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ள நிலையில் அதன் முதற்கட்டமாக கல்விசார்ந்த வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கும் வண்ணம் அதன் முதற்கட்டமாக சீன மக்கள் குடியரசின் தூதுவர் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இலங்கைக்கான சீன தூதுவரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் அனைத்து பீடங்களையும் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 150 மாணவர்களுக்கு முதற்கட்டமாக மாதாந்தம் நாலாயிரம் ரூபா வீதம் ஏழு மாதங்களுக்கான அன்பளிப்பு தொகையான 4.3 மில்லியன் ரூபாய் நிதி சீன தூதுவரினால் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கணகசிங்கத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது., மாணவர்களுக்கான புலமைப்பரிசில் அன்பளிப்பு தொகையும் சீன தூதுவர் உள்ளிட்ட அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நிகழ்வில் சீன தூதரகத்தின் உத்தியோகத்தர்கள், கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் கே.கருணாகரன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அமரசிங்கம் பகீரதன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், கிழக்கு பல்கலைக்கழகத்தின் திணைக்களங்களின் பணிப்பாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# திருமலை செயலகத்தில் அறுவடை நிகழ்வு நேற்று







(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் பயிரிடப்பட் மரக்கறிப்பயிர்களின் அறுவடை நேற்று அரசாங்க அதிபர் பி.எச்.என் ஜயவிக்ரமவின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

மாவட்ட செயலக வளாகத்தில் மிளகாய், கத்தரி, தக்காளி வெண்டி மற்றும் பாகல் உட்பட பல உணவுப்பயிர்கள் வெவ்வே கிளைகளால் பயிரிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அர நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத இடங்களில் உணவு பயிர்களை பயிரிட்டு அதன் மூலம் நுகர்வுக்கு அவசியமானவற்ற அவரவர் உற்பத்தி செய்தலை ஊக்குவிப்பதின் ஓர் அங்கமா இவ்வேலைத்திட்டம் மாவட்ட செயலகத்திலும் முன்னுதாரணமா மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் மாவட்ட விவசாய கிளை மூலம் பயிரிடப்பட் உணவுப்பயிர்களின் அறுவடையே இவ்வாறு நடைபெற்றது சேதனப் பசளைகளை முற்றாக பயன்படுத்தி இப்பயிர்கள் பரா ரிக்கப்பட்டு வருகின்றன.


மேலும் விவசாயக்கிளை மூலம் உணவுப்பயிர் நாற்றுமேடையு மாவட்ட செயலக வளாகத்தில் பராமரிக்கப்பட்டு வருவதுடன் அவை சலுகை விலையில் விற்பனை செய்யப்பட்டும் வருகின்றன.

இப்பயிர் அறுவடையின்போது மாவட்ட விவசாய பணிப்பாள எம். குகதாசன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே. விஜயதாசன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# தேசிய பொலிஸ் வாரத்தை ஒட்டி திருமலையில் இரத்ததான முகாம்







(ஹஸ்பர்)

தேசிய பொலிஸ் வாரத்தை கொண்டாடும் முகமாக திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்தின் வேண்டுகோளுக்கு ஏற்ப 'சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசன் – கிண்ணியா' அமைப்பினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் ஒன்று நேற்று திருகோணமலை பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்தின் 50 பொலிஸ் அதிகாரிகளும் மற்றும் ஏனைய சிவில் உத்தியோகஸ்தர்களும் இரத்தம் வழங்கினர். இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லக்ஷ்மன் மற்றும் மேற்படி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷிக் அலாப்தீன், திருகோணமலை மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள் மற் றும் தாதியர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# சுற்றாடல் அமைச்சர் நஸீரை சந்தித்தார் எகிப்து தூதுவர்!





இலங்கைக்கான எகிப்து தூதுவர் மேஜட் மொஸ்லிஹ் சுற்றாடல் துறை அமைச்சர் நஸீர் அஹமட்டை சந்தித்துள்ளார்.

இதன்போது, இலங்கைக்கான எகிப்து தூதுவர் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும்18ஆம்திகதிவரைஎகிப்தில்நடைபெறவுள்ள காலநிலை மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை தலைவர்கள் கலந்துகொள்ளும் உச்சி மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்த சந்திப்பில், அமைச்சரின் ஆலோசகரும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமான கருணாசேன ஹெட்டியாராய்ச்சி மற்றும் அமைச்சின் முக்கிய அதிகாரிகளும் பங்கேற் றுள்ளனர்.

# 2 லட்சத்து 7 ஆயிரம் சிறுவர்கள் போசாக்கின்மையயால் பாதிப்பு!

இருபத்தி ஏழாயிரம் சிறுவர்கள் போசாக்கின்மையினாலும் இரண்டு லட்சத்து ஏழாயிரம் சிறுவர்கள் போசாக்கின்மையாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன தெரிவித்தார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் நாட்டில் நிலவும் போசாக்கின்மை நிலை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாணவர் ஒருவரின் மதிய உணவுக்காக 60 ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அந்த தொகை போதாது எனவும் திருமதி குமாரி விஜேரத்ன தெரிவித்தார்.

கடுமையான போசாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள கர்ப்பிணித் தாய்மார்களின் போசாக்கு நிலை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.



# கிளிநொச்சியில் கைக்குண்டு மீட்பு

கிளிநொச்சி – தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உழவனூர் பகுதியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்று (செவ்வாய்க்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

தர்மபுரம் பொலிஸாருக்கு சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி இடம் பெறுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபரது உடைமையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என தர்மபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கைக்குண்டு கைவிடப்பட்ட பகுதியிலிருந்து எடுத்ததாகவும் பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காக கைக்குண்டை வைத்திருந்ததாகவும் விசாரணையில் சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யபட்ட சந்தேகநபர் மீது உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தர்மபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 170 ரூபா வரை எகிறியது சவர்க்காரத்தின் விலை!

## கறுப்புச் சந்தையின் இன்றைய நிலை

கறுப்பு சந்தையில் சவர்க்காரத்தின் விலை 170 ரூபா வரையில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில்,மீரிகம பகுதியில் 70 ரூபாவுக்கான சவர்க்காரத்தின் விலையை 170 ரூபாவாக மாற்றி விற்பனை செய்த வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என நுகர்வோர் சேவை அதிகார சபையின் கம்பஹா மாவட்ட விசாரணைப்பிரிவு தெரிவித்துள்ளது.

வாடிக்கையாளர் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடத்திய சோதனையில், இந்த வர்த்தகர் சவர்க்கார பொதியில் குறிப்பிட்டிருந்த விற்பனை விலையை அழித்து, 170 எனக்கூறி இவ்வாறு விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த நபர் சுமார் 300 சவர்க்கார கட்டிகளுடன் கைது செய்யப்பட்டு பின்னர் நீதிமன்ற உத்தரவிற்கமைய விடுவிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மணல் அனுமதிப்பத்திரத்தில் மோசடிகள் 8 டிப்பர் சாரதிகள் பொலிஸாரால் கைது!





அனுமதிப்பத்திரத்தில் மோசடி செய்து மணலேற்றிச் சென்ற எட்டு டிப்பர் வாகனங்களைத் தடுத்து வைத்துள்ளதோடு சாரதிகள் எண்மரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்.கைதடி ஏ9 வீதியில் பயணித்த டிப்பர் வாகனங்களை சாவகச்சேரி பொலிஸார் நேற்று(செவ்வாய்க்கிழமை) சோதனையிட்ட போதே இந்த மோசடி தெரிய வந்ததுள்ளது. இதனையடுத்து மேற்படி டிப்பர் வாகனங்கள் சாவ கச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சாரதிகளை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


## கர்ப்பிணிப்......

இலக்காகியுள்ளனர். தேயிலை மலையில் கொழுந்து கொய்துகொண்டிருந்த 13 பெண்களும், 5 ஆண்களுமே இன்று முற்பகல் இவ்வாறு குளவிக்கொட்டுக்கு உள்ளாகியுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் தோட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், அங்கிருந்து மஸ்கெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

## இந்தியாவை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றில் இந்திய அணியுடனான போட்டியில் இலங்கை அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

டுபாயில் நேற்றிரவு நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் இந்திய அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

அதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இந்நிலையில், 174 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்த வெற்றியின் ஊடாக இறுதிப் போட்டிக்கான இலங்கை அணியின் வாய்ப்பு பிரகாசமாகியுள்ளது.

## சர்வதேசக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கை குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த அறிக்கையை ஒட்டி மூன்று விடயங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலாவது - இந்த அறிக்கையைத் தமிழ் கூட்டமைப்பு வரவேற்கின்றது. இலங்கை அரசு பொறுப்புக் கூறல் விடயத்தில் தொடர்ந்து அசமந்தமாகப் பொறுப்பின்றிச் செயற்பட்டு வருவதை ஆணையாளரின் இந்த அறிக்கை அப்பட்டமாக, காட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.

இரண்டாவது - இதுவரை காலமும் ஆணையாளரின் அறிக்கை யுத்த குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்பு கூறல் பற்றியே வலியுறுத்தி வந்தது. இப்போது முதல் தடவையாக பொருளாதாரக் குற்றங்களுக்கும் பொறுப்பு கூறப்பட வேண்டும் என்பதை ஆணையாளர் வலியுறுத்தி இருக்கின்றார். நாட்டைச் சீரழித்த அக்குற்றவாளிகளையும் சட்டப்படி கையாளக் கோரும் அந்த வலியுறுத்தலை நாம் வரவேற்று வழிமொழிகிறோம்.

மூன்றாவது - இலங்கையில் நடந்த யுத்த குற்றங்கள் மற்றும் கொடூரங்கள் தொடர்பில் பொறுப்பு கூறல் நடவடிக்கைகள் சம்பந்தமாக அங்கத்துவ நாடுகள் உலகளாவிய ரீதியில் தமக்குள்ள சர்வதேச நீதியின் கடப்பாட்டின் அடிப்படையில், தவறிழைத்தவர்கள் மீது தத்தம் நாட்டிலேயே சட்ட, நீதி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஆணையாளர் முன்மொழிந்திருக்கும் கோரிக்கையை நாங்களும் முழுமையாக வலியுறுத்துகிறோம்.

அதேசமயம் இவ்விடயத்தை ஒட்டி அங்கத்துவ நாடுகளிடமும் நாம் மூன்று கோரிக்கைகளை முன்வைக்கிறோம்.

முதலாவது - ஆணையாளரின் இந்தக் காட்டமான அறிக்கையை அடிப்படையாக வைத்து, அதனை ஒட்டி, இம்முறை இலங்கை தொடர்பில் ஒரு வலிமையான, செயல் திறனுள்ள, காத்திரமான பிரேரணை ஒன்றை முன்வைத்து, தீர்மானமாக நிறைவேற்றும்படி வேண்டுகிறோம்.

இரண்டாவது - ஆணையாளர் சுட்டிக்காட்டியபடி அங்கத்துவ நாடுகள் தமக்கு இருக்கும் உலகளாவிய பொறுப்புக் கூறல் நீதிக் கடப்பாட்டின் அடிப்படையில் இலங்கையில் தவறிழைத்தவர்களுக்கு எதிராக தங்கள் தங்கள் நாட்டில் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகிறோம்.

மூன்றாவது - கடந்த 13 வருடங்களாக பொறுப்புக் கூறல் விடயத்தை இலங்கை முன்னெடுக்கவேயில்லை என்ற யதார்த்த புறச் சூழலில், இலங்கையின் இந்த விடயத்தை ஐ.நா. பாதுகாப்பு சபை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் ஒப்படைப்பது அல்லது பாரப்படுத்துவது நீண்ட தொடர் நடவடிக்கைகளாக அமைய வேண்டும் என்பது எமக்கு தெரியும். அதற்கான ஆரம்பத்தை இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்படும் பிரேரணையில் இடம்பெற செய்வதன் மூலம் அந்த நடவடிக்கையை மேற்கொள்ளத் தொடங்குமாறு நாம் வேண்டுகோள் விடுகிறோம். இந்தத் தடவை நிறைவேற்றப்படக்கூடிய தீர்மானம் இலங்கை விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நோக்கி நகர்த்துவதற்கான ஆரம்ப அடியாக இருக்க வேண்டும் என அங்கத்துவ நாடுகளை வலியுறுத்துகிறோம்.

# விறகு வெட்டச்சென்றவர் விறகுடன் வீழ்ந்து மரணம்

## கொக்கட்டிச்சோலைப் பகுதியில் சம்பவம்

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சில்லிக்குடியாற்றுப்பகுதியில் விறகு வெட்டச்சென்ற குடும்பஸ்தர் மீது விற குக்கட்டை விழுந்ததில் அவர் பலியான சம்ப வம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வைத்தியர் வீதி முனைக்காடு பிரதேசத் தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந் தையான 46 வயதுடைய சீனித்தம்பி சந்திர சேகரம் என்பவரே இவ்விபத்தில் பலியான வராவார்.

சம்பவ தினத்தன்று தனது மனைவியுடன் சில்லிக்குடியாற்றுப்பகுதிக்கு தனது வாடியில் விறகு விற்பனைக்காக நீண்ட வேம்பு மரக்குற்றியை வெட்டி சுமந்து வரும் வழியில் தவறுதலாக விறகுடன் நிலத்தில் விழுந்தார். சம்பவத்தைகண்ட மனைவி உறவினர்களின் உதவியுடன் மகிழடித்தீவு வைத்தியசாலைக்கு அவரைக் கொண்டு சென்று சேர்த்த போதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசார ணைகளின் போது தெரியவந்துள்ளது. மட்டக்களப்பு நீதிவான பீற்றர் போலின் உத்தரவிற்கமைவாக சம்ப இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டார். பிரேத பரிசோதனையை முடித்து நெருங்கிய உறவினர்களிடம் அதனை ஒப்படைக்கும் படி பொலிஸாருக்கு அவர் உத்தரவிட்டார். மேலதிக விசார ணைகளை கொக் கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.09.2022இல் வெளியிடப்பெற்றது.